

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.09.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ் அலை பதிப்பகத்தின் சார்பில் கவிஞர் அறிவுமதி அவர்கள் எழுதிய "உலக அமைதிக்கான நூல் புறநானூறு" என்ற நூலினை வெளியிட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன், கவிஞர் பழனிபாரதி, கவிஞர் இசாக், பழ. செல்வகுமார் ஆகியோர் உள்ளனர்.

# 50,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

## அமைச்சர் சி.வி. கணேசன் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.23-

முதலமைச்சர் அவர்கள் 2030-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் டாலராக உருவாக வேண்டும் என பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். பொருளாதார வளர்ச்சியில் மனித வளத்தின் திறன் மேம்பாடு மிகவும் அவசியம் என்பதால், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கட்டுமானம், கம்பி வளைப்பு, தச்சு, மின்பணியாளர், பிளம்பர், வெல்டர், பிளாக் ஸ்மித், வர்ணம் பூசுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அமைத்தல், சலவைக்கல் ஒட்டுதல் உள்ளிட்ட தொழில் இனங்களில் அவர்களது திறனை மேம்படுத்த ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சியினை கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள பயிற்சி மையத்தில் இன்று 22.09.2025 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், துவக்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் 50,000 தொழிலாளர்கள் பயன் பெற ஏதுவாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மூலம் ரூ.45.21 கோடி செலவில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சியின் போது ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாளொன்றுக்கு கூலி ரூ.800/ வீதம் பயிற்சி காலத்திற்கு ரூ.5600/ வழங்கப்படும்.

இப்பயிற்சியின் மூலம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள், டிஜிட்டல் அளவிடும் கருவிகள் பயன்பாடு, சுயதொழில் வாய்ப்பு, பணியிட பாதுகாப்பு மற்றும் உடல் நலன் பேணுதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இப்பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் கட்டுமானத் தொழிலாளர்கள் தங்களது திறனையும் தொழில் தரத்தையும் மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-2Aல் உதவியாளர் நிலை பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் கொ.வீரராகவராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.இராமன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பா.விஷ்ணுசந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ் வளர்ச்சித் துறையில்

# 13 உதவி இயக்குநர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப். 23-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.09.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகத் தெரிவு செய்யப்பெற்ற 13 நபர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையாகவும் செம்மையாகவும் செயற்படுத்திடும் வகையில் 1958ஆம் ஆண்டு ஆட்சி மொழிக்குழு உருவாக்கப்பட்டு, ஓர் ஆய்வுத் தனி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் 1972 இல் இப்பணியிடத்துடன் சேர்த்து ஒன்பது ஆய்வுத் தனியலுவலர் பணியிடங்களாக உருவாக்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலகக் கட்டமைப்பு சீரமைக்கப்பட்டு தமிழாய்வு அலுவலர் என்ற பதவிப் பெயரினை மாற்றி ஒருமுகமாக உதவி இயக்குநர் பணியிடங்கள் என 1998 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிறைவு செய்திட அரசாணை வெளியிடப்பட்டது.

இளங்கலை மற்றும் முதுகலை தமிழிலக்கியம் பயின்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 13 நபர்களுக்கு உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் வழங்கினார். தமிழ் இலக்கியக் கல்வி கற்றவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர்களாகப் பணி வாய்ப்புப் பெற்றுள்ளது தமிழுக்கான நற்காலம் மட்டுமல்ல பொற்காலமுமாகும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் , வேளச்சேரி மேற்கு பகுதியில், "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் "ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்புக் கூட்டம் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் சிறப்புரையாற்றினார். இதில் வேளச்சேரி மேற்கு பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, ச.அரவிந்தரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெ.மணிமாறன் எம்.சி, எஸ். பாஸ்கரன் எம்.சி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் மு.மனோகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

